# 59. மேற்கத்திய கல்வி முறையின் வளர்ச்சி
## (DEVELOPMENT OF WESTERN EDUCATION)

ஆங்கிலேயர் இந்தியாவில் பல்வேறு பகுதிகளை வென்று தங்கள் அதிகாரத்தை நிலை நாட்டிய போது இந்தியக் கல்வி முறையில் தலையிடவில்லை. அதை அபிவிருத்தி செய்யவும் விரும்பவில்லை. ஆனால் சிறிது சிறிதாக நம் நாட்டுக் கல்வி முறையில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது மேலும் இந்தியக் கல்வி முறையானது நம் நாட்டில் அவ்வப்போது எழுந்த சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களால் மட்டுமன்றி இங்கிலாந்தில் இத்துறைகளில் எழுந்த மாறுதல்களாலும் பாதிக்கப்பட்டது. 1800-ம் ஆண்டு வரை ஆங்கிலேயர்கள் ஒருசில பள்ளிகளையும், கல்வி ஸ்தாபனங்களையும் அமைத்துத் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி போதித்தனர். ஆனால் இந்தியாவில் நிலையான கல்வி வளர்ச்சி 1813-ம் ஆண்டிலிருந்து தான் ஆரம்பித்தது. அதன்பின் கல்விமுறை சீராகவும் நிலையாகவும் வளர்ச்சி அடைந்தது.

## ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இந்தியக் கல்வி முறை

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பாக இந்தியாவில் பழங்கால கல்வி முறையே நடைமுறையில் இருந்தது. சீரான ஓர் கல்வி அமைப்பு இல்லை. அப்போது கல்வியை மத நிலையங்களே போதித்து வந்தன. இந்துக்களின் பாடசாலைகள், முஸ்லீம்களின் மதராசாக்கள் ஆகியவற்றுடன் சில பாரசீகப் பள்ளிகளுமே இருந்தன. இந்துக்களுக்கு சமஸ்கிருதப் பண்டிதர்களும், முஸ்லீம்களுக்கு மௌல்விகளும் கல்வி போதித்தனர். கல்வி முறை அனைத்தும் இலக்கியம், தத்துவம், மத ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டே இயங்கின. கணிதம், அரசியல் வரலாறு, புவியியல் ஆகியவை போதிக்கப்படவில்லை. சுருங்கக்கூறின் நமது கல்வி முறையானது வெளியுலகத் தொடர்பு இல்லாமல் இருந்தது

# பண்டைக்காலத்தில் கல்வி

'இளமையில் கல்' என்பது பண்டைக் காலத்தில் வழங்கிய முதுமொழி. பல தமிழ்ப்புலவர்கள் கல்வியின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டுள்ளார்கள். சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களும், தளபதிகளும் கூட பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். பெண்கள் பல்வேறு கலைகளான இயல், இசை, நாடகம் போன்றத் துறைகளில் மேம்பாடுற்று இருந்தார்கள் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. பெண்பாற் புலவர்களான ஔவையார், காக்கைப் பாடினியார், முடத்தாமக் கண்ணியார் போன்ற புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர். மேலும் சங்க கால மன்னர்கள் கல்வியை ஊக்குவித்தனர். இந்தக் கால கட்டங்களில் கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் மரத்தின் நிழலில் அல்லது கோயில்களில் செயற்பட்டன. மேல்நிலைக் கல்விக்கூடங்களும் காணப்பட்டன. அவை மடங்கள், பள்ளிகள் அல்லது விகாரங்கள் என அழைக்கப்பட்டன.

பல்லவர்கள் காலத்தில், கல்வித் துறையில் முன்னேற்றம் காணப்பட்டது. இந்து, புத்த மற்றும் சமணர்களுக்கான கல்விக்கூடங்கள் காஞ்சிபுரம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டன. காஞ்சிபுரம் சமஸ்கிருத மொழியின் சிறந்த இலக்கியக் கூடமாக திகழ்ந்தது. இங்குள்ள கைலாசநாதர் கோயில் பொது ஆவணக் காப்பகமாகவும் விளங்கியது. யுவாங்



Scanned with CamScanner

சுவாங் என்னும் சீனப்பயணி நரசிம்மவர்ம பல்லவர் காலத்தி
காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார். நாளந்தா பல்கலைக்கழகத்
வேந்தராக இருந்த தர்மபாலர் காஞ்சிபுரத்தை சேர்ந்தவர் ஆவ
சைவ மற்றும் வைணவ மடங்கள் கல்வியை ஆதரித்த
விகாரங்கள், சமணப்பள்ளிகள் புத்த மற்றும் சமண ம
தத்துவங்களைப் பரப்பின. எண்ணாயிரம், திருபுவனி மற்
குன்றத்தூர் ஆகிய இடங்கள் பிற்காலச் சோழர்கள் காலத்தி
காணப்பட்ட கல்விக்கூடங்கள் ஆகும்.

> பெரிய புராணத்தை எழுதிய சேக்கிழார் சென்னையை அடுத்த
> குன்றத்தூரைச் சார்ந்தவர்.

கல்வி நிலையங்கள் பாண்டியர்கள் காலத்தில் சாலைக
என்றழைக்கப்பட்டன. பாண்டியர்கள் திருவனந்தபுரத்திற்
அருகிலுள்ள காந்தளூர்ச் சாலை மற்றும் பார்திபசேகரபுரம் ஆகி
இடங்களில் கல்வி நிலையங்களை அமைத்தனர். தஞ்சாவூ
ஆண்ட மராத்திய மன்னன் இரண்டாம் சரபோஜி என்பவ
1824 ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் என்னும் நூலகத்தை
தஞ்சாவூரில் நிறுவினார். இவ்வாறாக விஜய நகர அரசர்கள்
நாயக்கர்கள் மற்றும் மராத்திய மன்னர்கள் கல்வி வளர்ச்சிக்கு
பெரும்பங்கு ஆற்றியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அரேபிய
மற்றும் பாரசீகக்கல்வி மதராசாக்களின் மூலமாக அளிக்கப்பட்டது

## கிறித்துவக் குருமார்களின் கல்வித்தொண்டு

15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மற்றும் கிறிஸ்துவ சமய சீர்திருத்தத்திற்கு பிறகு ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் கிறித்துவ சமயத்தை பரப்ப தொடங்கினார்கள். மேலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிறித்துவ குருமார்கள் பல பள்ளிகளை (Missionary Schools) நிறுவினார்கள்.

**கிறித்துவ குருமார்களின் வளர்ச்சி :** பதினாறாம் நூற்றாண்டில் முதன் முதலில் போர்ச்சுக்கீசியர்கள் தமிழ்நாட்டில் சமயத் தொண்டினை ஆரம்பித்தனர். அவர்கள் ஏசுசங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினர். அச்சங்க பாதிரிமார்களுள் அருட்தந்தை பெர்ணாண்டஸ் (Father Fernandas) என்பவர் முக்கியமாவார்.



Scanned with CamScanner

இவர் 1567-ல் புன்னக்காயல் என்னுமிடத்தில் ஒரு தேவாலயத்தையும், பள்ளியையும் நிறுவினார். இந்த ஏசுசங்கம் சென்னை, நாகப்பட்டினம், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் அதிக அளவில் பள்ளிக் கூடங்களையும் கல்லூரிகளையும் அமைத்தது.

மதுரை சமயப்பரப்புக்குழு (Madura Mission) கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கதாகும். சிறந்த அறிவாற்றல் கொண்ட ராபர்ட்-டி-நோபிலி என்ற பாதிரியார் 1605 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்தார். 1606 ஆம் ஆண்டு முத்துகிருஷ்ணப்பநாயக்கர் காலத்தில் மதுரைக்கு வருகை புரிந்தார். அவர் தமது சமய பரப்புப் பணிகளை தென் தமிழ்நாட்டில் குறிப்பாக மதுரையில் ஆரம்பித்தார். அவர் ஓர் இந்து சமயத்துறவியைப் போல தன்னை மாற்றிக்கொண்டு இந்துக் கலாச்சாரத்தைப் பின்பற்றி, கிறித்துவ சமயக் கொள்கைகளை மக்களிடம் பரப்பினார். மதுரை சமய பரப்புக்குழுவின் மற்றொரு தனித்தன்மை வாய்ந்த சிறப்புக்குரிய அருட்தந்தை ஜான் டி-பிரிட்டோ ஆவார். அவர் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காக ராமநாதபுரம் மற்றும் புதுக்கோ ட்டைக்கு சென்றார். வீரமாமுனிவர் என்று பெருமையுடன் அறியப்படும் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி இந்தக்குழுவில் 1711 ஆம் ஆண்டு முதல் 1742 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். மேலும் இவர் தமிழில் இலக்கண நூல்களையும் அகராதிகளையும் எழுதியுள்ளார்.

அமெரிக்க யாழ்ப்பாண சமய பரப்புக்குழு என்ற அமைப்பு 1834 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த அமைப்பு மதுரை, திண்டுக்கல் மற்றும் ராமநாதபுரம் ஆகிய இடங்களில் பல பள்ளிக்கூடங்களை நிறுவியது. ஆற்காடு சமய பரப்புக்குழு 1853 ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த ஸ்கட்டர் சகோதரர்களால் (Scudder Brothers) ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் மருத்துவமனைகளையும், தர்மஸ்தாபனங்களையும் மற்றும் பள்ளிகளையும் நிறுவி அடித்தட்டு மக்களிடையே பிரசித்திப் பெற்றார்கள். ஆற்காடு மாவட்டத்தில் ஊரீஸ் (Voorhees) கல்லூரியையும் மற்றும் பல பள்ளிகளையும் நிறுவினார்கள்.



Scanned with CamScanner

இக்னேசியஸ் லயோலா என்ற சமய பரப்புக்குழு சென்னையில் லயோலா கல்லூரியை நிறுவியது. தாம்பரத்தில் சென்னைக் கிறித்துவக் கல்லூரி, நாகர்கோவிலில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரி, மதுரையில் அமெரிக்கன் கல்லூரி திருச்சியில் புனித ஜோஸப் கல்லூரி, பாளையங்கோட்டையில் புனித சேவியர் கல்லூரி மற்றும் சென்னையில் பெண்கள் கிறித்துவக் கல்லூரி போன்றவை கல்வி வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டன. செங்கல்பட்டு மற்றும் சென்னை ஆகிய இடங்களில் பல கல்லூரிகளும், பள்ளிகளும் நிறுவப்பட்டன. பிராடஸ்டண்ட் குருமார்கள் சென்னை, தஞ்சாவூர், கடலூர், திருச்சி, பாளையங்கோட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் கல்லூரிகளையும் பள்ளிகளையும் அமைத்தனர். பேசல் சமயபரப்புக் குழு (Basel Mission) பயிற்சி பெற்ற அநாதைகளுக்கு வேலை வாய்ப்பளித்தது. ஏழை மக்களுக்கு ஓர் நம்பிக்கை ஒளியை கொடுத்தது. லண்டன் சமயபரப்புக்குழு நாகர்கோவில், நெய்யூர் மற்றும் பாளையங் கோட்டை ஆகிய இடங்களில் தன் கவனத்தைச் செலுத்தியது. இந்த அமைப்பு கல்வி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தியது.

தமிழ்நாட்டில் கிறித்துவ சங்கங்கள் மேலை நாட்டுக்கல்வி முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தின. கிறித்துவ குருமார்களால் திறக்கப்பட்ட பள்ளிகள் சாதி மத பேதமின்றி அனைத்து இன மாணவர்களுக்கும் பயிற்சியளித்தது. இவ்வாறாக தமிழ்நாட்டிலிருந்த கிறித்துவ குருமார்கள் கல்வியின் முன்னேற்றத்தில் முதன்மையான பங்கு வகித்தார்கள்.

## ஆங்கிலேயர் வருகைக்கு பிறகு தமிழகக்கல்வி

ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி போதிய பொருளாதார வசதியில்லாத காரணத்தால் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தாது காலம் தாழ்த்தியது. 1813 ஆம் ஆண்டு பட்டய சட்டத்தின் படி இந்த நிலையில் மாற்றமும், கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய தொடக்கமும் ஏற்பட்டது. இந்த பட்டய சட்டத்தின்படி மேலை நாட்டுக் கல்வி வளர்ச்சிக்காக ஆங்கில பாராளுமன்றம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கியது. இதைத் தொடர்ந்து பள்ளிக்கூட புத்தக சங்க

Scanned with CamScanner

(School Book Society). 1819 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1820 ஆம் ஆண்டு தாமஸ்மன்றோ என்பவர் சென்னை மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் கல்வி திட்டங்களுக்காகச் செலவிடப்படும் .தொகை என்றும் அழிவில்லாதது என வாதிட்டார். அதைத்தொடர்ந்து 1822 ஆம் ஆண்டு கல்விக்குழு (Education Commission) ஒன்று அமைக்கப்பட்டது. பொதுக்கல்வி வாரியம் (Board of Public Instruction) ஒன்று அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகள் நிறுவப்பட்டன. மேலும் வட்டங்களிலும் பள்ளிகள் திறப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டன. மன்றோவின் முயற்சியினால் சென்னை மாகாணத்தில் ஏறத்தாழ 70 பள்ளிகள் நிறுவப்பட்டன.

1823 ஆம் ஆண்டு பொதுக்கல்வி இயக்குனரகம் அமைக்கப்பட்டது. ஏ.ஜே.அர்புத்நாட் என்பவர் அதன் முதல் இயக்குநராக நியமிக்கப் பட்டார்.

**கீழ் நோக்கிப் பரவும் திட்டம் (Filtration theory) :** 1830 ஆம் ஆண்டு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கீழ்நோக்கி பரவும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன்படி கல்வி மேல்மட்ட பிரிவைச் சார்ந்த மக்களுக்கு மட்டும் முதலில் அளிக்கப்பட்டது. அவர்கள் தாம் பெற்ற அக்கல்வி அறிவை பொதுமக்களுக்கு அளிக்கவேண்டும். மேல்மட்ட மக்களிடமிருந்து கல்வியானது பொதுமக்களை சென்றடையாத காரணத்தினால் இம்முறை தோல்வியில் முடிவடைந்தது.

சென்னை மருத்துவக்கல்லூரி (1835), சென்னை மாநிலப்பள்ளி (1836) சென்னைக் கிறித்துவப்பள்ளி (1840), சென்னை பச்சையப்பன் பள்ளி (1841) ஆகிய பள்ளிகள் செல்வந்தர்கள் மற்றும் உயர்குடியினரின் தேவையை நிறைவேற்றியது. நகரப்பள்ளிகளைத் தவிர மற்ற பள்ளிகள் புறக்கணிக்கப்பட்டன.

**சார்லஸ் உட் அறிக்கை (Charles Wood's Despatch) :** ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தனது தவறுகளை உணர்ந்து. 1854 ஆம் ஆண்டு சார்லஸ் உட் அறிக்கையின் மூலம் கல்வியில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. கீழ்நோக்கி பரவும் திட்டத்திற்கு மாற்றாக சார்லஸ் உட் திட்டம் அமைந்தது. ஆரம்பக்



Scanned with CamScanner

கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி வரை அனைத்து படிநிலைகளையும் இணைப்பதே இதன் குறிக்கோளாகும் மேலை நாட்டுக்கல்வியைப் பரப்புவதற்கு இத்திட்டம் அதிக வாய்ப்பளித்தது. இந்தப் புதிய முறையில் மாவட்ட மற்றும் வட்டஅளவிலான பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இந்தப் பள்ளிகளில் தாய்மொழியில் கல்வி போதிக்கப்பட்டது. ஆங்கிலம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது. வட்டாரமொழிப் பள்ளிகள் திறக்கப்பட்டன.

சார்லஸ் உட்அறிக்கை கல்வி வளர்ச்சியின் 'மகாசாசனம்' என்று அழைக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் கல்வி சீராக வளரத்தொடங்கியது. மேல்நிலைக்கல்வி நிலையான வடிவி னைப் பெற்றது. 1835 ஆம் ஆண்டி லிருந்து செயல்பட்ட




மாநில கல்லூரி

மருத்துவப் பள்ளி 1851 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரியாக வளர்ந்தது. சென்னை யில் தொடங்கப்பட்ட நில அளவைப்பள்ளி 1857 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரி யாக வளர்ந்தது. மாநிலப்பள்ளி மாநிலக் கல்லூரியாக உருப் பெற்றது அது நிலப்பிரபுக்களும், அரசகுமாரர்களும் படிக்கும் கல்லூரியாக காணப்பட்டது. 1857 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி சென்னை பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. 1859 ஆம் ஆண்டிற்கு

அது முழுவளர்ச்சி பெற்ற பல்கலைக்கழகமாக வளர்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் கல்லூரிகள் நிறுவப்பட்டன.

ஹண்டர் குழு (Hunter Commission) 1882 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஹண்டர்குழு கல்வி வளர்ச்சியில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. அதன் மூலம், ஆரம்ப நிலைக்கல்வி அதிக அளவில் புறக்கணிக்கப்பட்டுவிட்டதை கண்டுபிடித்தது. இந்தியாவில் மற்ற பகுதிகளைப் போல தமிழ்நாட்டின் கிராமப்பகுதிகளில் கல்வி புறக்கணிக்கப்பட்டதால் ஆரம்பக்கல்வி மிகுந்த பாதிப்புக்குள்ளானது. ஆகவே ஹண்டர் குழு கல்விப் பொறுப்பை நகராட்சி மற்றும் மாவட்ட மையங்களிடம் பிரித்துக்கொடுக்க சிபாரிசு செய்தது.

| |
|---|
| 1890 ஆம் ஆண்டு சென்னை ஆளுநர் கன்னிமாராபிரபு, கன்னிமாரா பொது நூலகத்தை உருவாக்கினார். |



அண்ணாமலை பல்கலைக்கழகம்

1891 ஆம் ஆண்டு சென்னையில் சட்டக் கல்லூரி அமைக்கப் பட்டது. 1929 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரால் நிறுவப் பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் ஆழ்கடல் உயிரியல் துறை (Marine Biology) உட்பட பல துறைகள் தொடங்கப் பட்டன.



Scanned with CamScanner

மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அதிக அளவில் புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் கொண்ட பெரிய நூலகம் ஒன்றும் இங்கு நிறுவப் பட்டது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாடு கல்வி வளர்ச்சியில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்புச்சட்டப்படி கல்வி மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1944-ல் சர் ஜான் சார்ஜண்ட்டின் ஆலோசனைப் படி, 6 வயது முதல் 14 வய்து வரை உள்ள மாணவர்களுக்கு இலவசக் கட்டாயக்கல்வி வழங்கப்பட்டது. இவ்வாறாக தமிழ்நாட்டில் கல்வி படிப்படியாக முன்னேற்றமடையத் துவங்கியது.

**மேலைநாட்டுக்கல்வியினால் ஏற்பட்ட நன்மைகள் :**

1. மேலைநாட்டுக் கல்வி மக்களின் முற்போக்கு சிந்தனையை வளர்த்து சமுதாய மறு மலர்ச்சிக்கு வித்திட்டது. இருபதாம் நூற்றாண்டின் சிறந்த தமிழ்ப்புலவன் பாரதி தன்னுடைய முற்போக்கானக் கருத்துக்களை வெளியிட்டார். எல்லோருக்கும் கல்வி மற்றும் சமுதாய நீதி கிடைக்க வேண்டும் என்பது பாரதியாரின் நோக்கமாகும்.
2. மேலைநாட்டுக்கல்வி மக்களிடையே தேசிய விழிப்புணர்ச்சியை வளர்த்தது.
3. வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாடு வளரத்தொடங்கியது. பல்வேறு ப்குதியிலிருந்து மக்கள் ஒருவரோடு ஒருவர் ஒருங்கிணைந்து செயல்பட்டதால் தேசிய இயக்கம் வளரத் தொடங்கியது. இது அரசியல் ஒற்றுமைக்கு வழி வகுத்தது.
4. ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கல்வி முறையானது தொழில்கல்விக்கும், பெண்கல்விக்கும் தேவையான முக்கியத்துவம் அளித்தது.

Scanned with CamScanner

**தீமைகள் :**

1. மேலைநாட்டுக் கல்விமுறை அடித்தள மக்களின் கல்வியைப் புறக்கணித்தது.

2. ஆங்கிலக் கல்வி பயின்றவர்களுக்கு மட்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. அவர்கள் ஆங்கில அரசாங்கத்தால் எழுத்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

3. மேலைநாட்டுக் கல்விமுறையானது படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் இடையே ஒரு பெரிய விரிசலை ஏற்படுத்தியது.

Scanned with CamScanner

இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. சமுதாய முன்னேற்றங்களை கொண்டு வருவதில் கல்வி சிறந்த பங்கு வகிக்கின்றது. மேலும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவளர்ச்சி, சமுதாய அரசியல், பொருளாதார நிலைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்களினால் ஏற்பட்ட புரட்சி தமிழக வரலாற்றில் ஒரு மைல் கல் எனக் கருதப்படுகிறது. எனவே தமிழகம் அனைத்து துறைகளிலும் ஒரு மாபெரும் வளர்ச்சியை கண்டது.

## கல்வி

சுதந்திரத்திற்கு பின், நமது நாட்டில் நிலவிய கல்வி முறையில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாறி வரும் சூழலுக்குகேற்ப நமது நாட்டு மக்களின் எண்ணங்களுக்கேற்ற கல்வி முறையை கொண்டு வர நமது அரசு பல்வேறு கல்விக்குழுக்களை அமைத்தது. அவற்றில் முக்கியமானவை :

1. பல்கலைக்கழக மான்யக்குழு



Scanned with CamScanner

2. இடைநிலைக் கல்விக்குழு

3. கோத்தாரிக் கல்விக்குழு

4. புதிய கல்விக்கொள்கை

5. தேசிய கல்விக்கொள்கை

1, பல்கலைக்கழக மான்யக்குழு (1948) : டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் இந்திய அரசாங்கம் 1948-ல் பல்கலைக்கழக மான்யக்குழுவை அமைத்தது. இக்குழு உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

| |
|---|
| டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5 ஆம் நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. |

இந்திய அரசியலமைப்பின் 45வது பிரிவு 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க உத்திரவாதம் அளிக்கிறது.

இடைநிலைக்கல்விக்குழு (1953) : 1953 -ஆம் ஆண்டு டாக்டர் A.லட்சுமணசாமி முதலியார் அவர்களின் தலைமையில் இடைநிலைக்கல்விக்குழு அமைக்கப்பட்டது. இது இடைநிலைக்கல்வி அளவில் குழந்தைகள் அனைத்து திறன்களிலும் முழுவளர்ச்சி பெறவேண்டும் என்பதை வலியுறுத்தியது. அதுமட்டுமின்றி இடைநிலைக்கல்வியானது உயர்கல்விக்கு ஆயத்தப்படுத்தும் வகையில் இருக்கவேண்டுமென்று ஆலோசனை வழங்கியது.

கோத்தாரிக் கல்விக்குழு (1964) : தேசிய கல்விக்குழு என்று அழைக்கப்பட்ட கோத்தாரிக் கல்விக்குழு 1964 ஆம் ஆண்டு டாக்டர் D.S.கோத்தாரி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. இக்குழு 1966 ஆம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையானது 10+2+3 கல்வி முறையை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது. அதுமட்டுமின்றி தொழிற்கல்வி, அறிவியல், தொழில் நுட்பகல்வி போன்றவற்றை வலியுறுத்தியது. 1965 ஆம் ஆண்டு



Scanned with CamScanner

தமிழகத்தில் மும்மொழித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

புதிய கல்விக்கொள்கை (1986) : 1986 ஆம் ஆண்டு ஏற்பட்ட புதிய கல்விக்கொள்கை மனித வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், ஊனமுற்றோர், சிறுபான்மையினர் முதலானோருக்கு கல்வி வழங்குதலில் மிகுந்த கவனம் செலுத்தி சமூக வேற்றுமைகளை நீக்குவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. மேலும் இக்கல்விக்கொள்கையானது நாடு முழுவதும் உள்ள 6 வயது முதல் 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வி அளிப்பதை வலியுறுத்தியது. மேலும் இக்கல்விக் கொள்கையானது இயற்கை வளங்களையும் சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்துவதையும் வலியுறுத்தியது.

தேசியக்கல்விக்கொள்கை (1992) : இக்கல்விக் கொள்கையானது பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 'கரும்பலகைத்திட்டம்' என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது. மேலும் முறைசாராக் கல்வி மூலம் கல்லாமையைப் போக்கும் தேசிய எழுத்தறிவு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கல்வி கொள்கை நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதையும் ஏழ்மை, வேலை வாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகளை அகற்றுவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

ஆரம்பக்கல்வி வளர்ச்சி :

ஆரம்பக்கல்வி வளர்ச்சியில் நம் மாநிலம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. 1949-50 ஆம் வருடங்களில் 15,303 ஆரம்ப பள்ளிகள் இருந்தன. துவக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 1999 ஆம் ஆண்டு 30,844 ஆகவும் தற்போது 2003-2004 நிதி அறிக்கையின்படி 32,242 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

ஆரம்பக்கல்வி அளவில் இடைநிற்றலை (Dropout) தவிர்க்கவும் கல்வியின் தரத்தை உயர்த்தவும் இந்திய அரசு "சர்வ சிக்ஷா அபியான்" (எல்லோருக்கும் கல்வி, SSA) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

## இடைநிலைக்கல்வி வளர்ச்சி :

இடைநிலைக்கல்வியானது ஆரம்பக்கல்விக்கும் உயர்கல்விக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது. தமிழகத்தில் 2003 ஆம் ஆண்டு நிலவரப்படி 68,212 ஆசிரியர்களை கொண்டு 4,859 இடைநிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. நமது தேசிய கல்விக்கொள்கை (1992) தொழிற்கல்வியின் தேவையை வலியுறுத்தியது. இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு 1978 ஜீன் மாதத்தில் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்தியது. தற்போது, விவசாயம், மனையியல், பொறியியல் போன்ற பல்வேறு தொழிற் பாடப்பிரிவுகள் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## உயர்கல்வி வளர்ச்சி :

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு உயர்கல்வி வளர்ச்சி நம் நாட்டில் நல்ல சிறப்பு பெற்றது. உயர்கல்வியை பொதுக்கல்வி, தொழிற்கல்வி என இரு பிரிவுகளாக பிரிக்கலாம். பொதுக்கல்வியானது கலை, அறிவியல், வணிகவியல் பிரிவுகளை உள்ளடக்கியது. தொழிற்கல்வியானது பொறியியல், மருத்துவம், விவசாயம் போன்ற பிரிவுகளை உள்ளடக்கியது.

வளர்ந்து வரும் மாணவர்களின் தேவைக்கேற்ப தமிழகத்தில் இவ்விரண்டு பிரிவுகளுக்காக பல்வேறு கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் பல அறிவியல் கலைக்கல்லூரிகளும் பல பல்கலைக்கழகங்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் 1970 ஆம் ஆண்டு பயிற்று மொழியாக தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் :

தமிழகம் புகழ்பெற்ற பல அறிவியல் மேதைகளை நம்நாட்டிற்கு அளித்துள்ளது. அதேபோல் இந்தியாவி அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு நம் மாநிலம் சிறப்ப பணியாற்றியுள்ளது. இராமானுஜம் (கணிதம்) டாக்டர் சர். வி.ராமன் (இயற்பியல்) டாக்டர் சந்திரசேகர் (இயற்பிய டாக்டர் ஏ.பி.ஜே, அப்துல்கலாம் (விண்வெளி) போன் புகழ்பெற்ற அறிவியல் மேதைகள் தமிழகத்தைச் சேர்ந்தவர்க என்பது குறிப்பிடத்தக்கது.

> டாக்டர் சர்.சி.வி.ராமன் மற்றும் டாக்டர் சந்திரசேகர் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் ஆவர்.

## விவசாய ஆராய்ச்சி :

உலகப்புகழ்பெற்ற விவசாய ஆராய்ச்சியாளர் டாக்ட எம்.எஸ். சுவாமிநாதன் தமிழகத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவ இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தை புணரமைத்தார். அரிசி உற்பத்திக்காக புதிய தொழில்நுட்ப முறையை கொண்டுவந்தார் அதை அதிக மகசூல் திட்டம் (HYVP) என்று அழைக்கிறோம். தமிழகத்தில் கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகம் மதுரை விவசாயக் கல்லூரி மற்றும் பிற இடங்களில் பல்வேறு விவசாய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

> ஆண்டு தோறும் டிசம்பர் 23 ஆம் நாள் விவசாயிகள் தினமாக கொண்டாப்படுகிறது.

## தொழில்துறை ஆராய்ச்சி :

இந்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கழகம் (CSIR) நாடு முழுவதும் பல அறிவியல் கூடங்களையும் ஆராய்ச்சி நிறுவனங்களையும் அமைத்து வருகிறது. டாக்டர் ஜி.டி. நாயுடு தமிழகத்தை சேர்ந்த புகழ் பெற்ற தொழில்துறை வல்லுநர் ஆவார். சென்னை, கோவை, திருச்சி, சேலம், மேட்டூர் திருநெல்வேலி மற்றும் பல இடங்களில் ஏராளமான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

## அணுசக்தி ஆராய்ச்சி :

அணுசக்தியை வளர்ப்பதற்காக அணுசக்திக்குழு (AEC) 1948 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தமிழகத்தில் சென்னைக்கு அருகில் கல்பாக்கத்தில் அணுசக்தி நிலையம் உள்ளது. புகழ்பெற்ற அணுசக்தி விஞ்ஞானியான டாக்டர் சிதம்பரம் தமிழகத்தைச் சேர்ந்தவர் ஆவார். திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளம் என்னுமிடத்தில் அணுசக்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அது அணுசக்தி துறையில் பல சாதனைகளைப் படைத்து வருகிறது.

## விண்வெளி ஆராய்ச்சி :

விண்வெளி தொழில்நுட்பத்தை தேசிய நலனுக்கு பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் 1972 ஆம் ஆண்டு ஏற்படுத்தபப்ட்டது.

> முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் "ஏ.பி.ஜே. அப்துல்கலாம்" புகழ்பெற்ற விண்வெளி ஆராய்ச்சியாளர். அவர் அக்கினி சிறகுகள் என்ற நூலை எழுதியுள்ளார்.

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மகேந்திரகிரி என்னுமிடத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் (ISRO) அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகம் விண்வெளி ஆராய்ச்சியில் சிறப்பான பணிகளை செய்து வருகிறது. தென்கிழக்கு, ஆசியாவிலேயே மிகப்பெரிய தொலைநோக்கி வேலூர் மாவட்டத்தில் காவலூர் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது விண்வெளி ஆராய்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. சென்னையில் அமைக்கப்பட்டுள்ள பிர்லா கோளரங்கம் மாணவர்களிடையே அறிவியல் அறிவை வளர்த்து வருகிறது.

## செய்தித்தாள்கள் :

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பொது தொடர்புச் சாதனங்கள் சிறப்பான பணியை செய்து வருகின்றன. செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி தொலைபேசி போன்றவை முக்கிய மக்கள் தொடர்புச் சாதனங்களாகும்.



Scanned with CamScanner

மக்களின் கருத்துக்களை அறிவதில் செய்தித்தாள் சக்தி வாய்ந்த தொடர்புச் சாதனமாக திகழ்கிறது. தமிழகத்தில் பல்வேறு நாளிதழ்கள், வார இதழ்கள், மாதஇதழ்கள், பருவஇதழ்கள் ஆண்டுஇதழ்கள் வெளிவருகின்றன. இவை மக்களுடைய சமுதாய அரசியல் மாற்றங்களை பிரதிபலிக்கின்றன. அது மட்டுமின்றி இவை அனைத்தும் அரசுக்கும் மக்களுக்குமிடையே ஒரு பாலமாக செயல்படுகின்றன. எனவே அறிவை வளர்க்கவும் பல தகவல்களை பெறவும் இவை பயன்படுகின்றன.

## வானொலி :

இந்தியாவில் 1927 ஆம் ஆண்டு முதன்முதலாக வானொலி ஒலிபரப்பு துவக்கப்பட்டது. எனினும் இந்திய அர 1936 ஆம் ஆண்டு முதன்முதலாக ஒலிபரப்பு கருவிகளை கொண்டு இந்திய ஒலிபரப்பு துறை, ஒலிபரப்பும் பணியை துவக்கியது. இத்துறை அகில இந்திய வானொலி என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழகத்தில் திருச்சி, மதுரை, கோவை மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களில் வானொலி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தகவல்களை அளித்தல் மற்றும் மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை அகில இந்திய வானொலி நிலையம் சிறப்பாக செய்து வருகிறது. இந்திய அரசாங்கம் ஒலிபரப்பு மற்றும் தகவல் கொள்கைகளை உருவாக்கவும் நடைமுறைபடுத்தவும் பிரச்சார் பாரதி என்ற அமைப்பை ஏற்படுத்தி உள்ளது. இதை தவிர, பல்வேறு தனியார் அலைவரிசைகளும் தங்களது நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன.

## தொலைக்காட்சி :

அறிவியல் ஏற்படுத்திய விந்தைகளில் தொலைக் காட்சியும் ஒன்றாகும். இந்தியாவில் 1959 ஆம் ஆண்டு தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. தொலைக்காட்சி மனித சமுதாயத்திற்கும் நமது பண்பாட்டிற்கும் எண்ணற்ற சாதனைகளை செய்து வருகிறது. சென்னையி

Scanned with CamScanner

தொலைக்காட்சி நிலையம் 1975 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இளைய மற்றும் முதிய தலைமுறையினர்களின் மனதில் பெரிய தாக்கத்தை தொலைக்காட்சி ஏற்படுத்தி வருகிறது. தொலைக்காட்சி நாட்டிலுள்ள பல்வேறு மக்களின் கலை, கட்டிடக்கலை, இசை மற்றும் வாழ்க்கைத் தரத்தைப்பற்றி அறிய ஏதுவாக உள்ளது.

**தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர் ஜே.எல். பியர்டு ஆவார்.**

இதைத்தவிர இந்தியாவில் பல்நோக்கு செயற்கை கோளான இன்சாட் (INSAT) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு வானிலை ஆராய்ச்சி, வானொலி ஒலிபரப்பு, போன்றவற்றிற்கு இன்சாட் உதவுகிறது. தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளை நேரடி ஒலிபரப்பு செய்வதின் மூலம், தொலைக்காட்சி உலக மக்களிடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும் தொலைக்காட்சி, மாணவர்களும் அனைத்து துறைகளில் அறிவு வளர்ச்சி பெற உதவுகிறது.

## தொலைபேசி :

தொலைபேசி மற்றும் தந்தி துறையின் வளர்ச்சி தொலைதொடர்பு வரலாற்றில் ஒரு முக்கிய சகாப்தமாக விளங்குகிறது. பிரான்சு நாட்டை சேர்ந்த எம்.லேமண்ட் என்பவர் 1787 - ஆம் ஆண்டு தந்தியை கண்டுபிடித்தார். 1857 ஆம் ஆண்டு டல்ஹௌசிபிரபு தந்தி முறையை முதன் முதலில் இந்தியாவில் புகுத்தினார். அந்த காலகட்டத்தில் இந்தியா முழுவதும் 753 தபால்-தந்தி அலுவலகங்கள் நிறுவப்பட்டன. தந்தி துறை வளர்ச்சியை மக்கள் பெருமளவில் பயன்படுத்தினர். தந்தி வளர்ச்சி தொலை தொடர்பு துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட காரணமாயிற்று.

**1876 ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த அலெக்சாண்டர் கிரகாம்பெல் தொலைபேசியை கண்டுபிடித்தார்.**

இருபதாம் நூற்றாண்டில் மக்கள் தொலைபேசியை பயன்படுத்தத தொடங்கினர். 1882 ஆம் ஆண்டு முதன்முதலாக சென்னையில் தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது.



Scanned with CamScanner

சுதந்திரத்திற்கு பின் தொலைபேசி சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை துவங்கப்பட்டன. இந்திய அரசால் பெங்களுரில் முதன் முதலாக தொலைபேசிச் சாதனங்கள் செய்யும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. தற்போது பாரத் சஞ்சார் நிகாம் தொலைதொடர்பு துறையில் (BSNL) இந்திய மக்களுக்கு சிறந்த சேவையை அளித்து வருகிறது. தனியார் துறையும் பல தொலைபேசி சேவைகளையும் தொழிற்சாலைகளையும் பல இடங்களில் அமைத்துள்ளது. டாடா, பி.பி.எல், பீடெல் போன்ற பல நிறுவனங்கள் தொலைபேசி சாதனங்கள் தயாரித்து வருகிறது. தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு நிலவரப்படி 1513 தொலைபேசி இணைப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் 15,82,540 தொலைபேசி இணைப்புகள் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

**கணினி :**

கூட்டல் இயந்திரம், அபாகஸ்முறை, பலகைமுறை போன்று எந்த ஒரு இயந்திரம் எண்களை கூட்டுவதற்கு பயன்படுத்துகிறோமோ அதை பொதுவாக கம்ப்யூட் (Compute) எனும் பொருள்பட கம்ப்யூட்டர் என்று அழைப்பர். இருந்தபோதிலும் தற்போது இந்த மின்னனு கண்டுபிடிப்பானது பல்வேறு கணக்குகளை செய்ய மற்றும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கவும், அப்புள்ளி விவரங்களை தேவையான போது கையாளவும், தகவல்களை சேகரித்து வைக்கவும், தேவையானபோது அவற்றை பெறவும், திட்டதிரல்களை அமைக்கவும் பயன்படுகிறது. 1953 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 100 கணினிகளே இருந்தன. தற்போது நூறு மில்லியன் அளவிலான கணினிகள் உள்ளன. 10 மில்லியனுக்கும் மேலான வீடுகள், அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் கணினி இன்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கணினிகள் பல்வேறு அளவிலும் பல்வகை வடிவங்களிலும் அமைக்கப்படுகிறது. சில கணினிகள் குறிப்பிட்ட பணிகளை செய்வதற்காகவே வடிவமைக்கப்படுகின்றன. அவற்றின் செயல்பாடுகள் நுண்ணியமென்பொருள் (Microchips)



Scanned with CamScanner

மூலமாக திட்டமிட்டு வடிவமைக்கப்படுகிறது. இன்று நடைமுறையில் உள்ள கணக்கீட்டு பொறிகள், எண்ணியல் கடிகாரங்கள், தானியங்கிகள் அனைத்தும் கணினியை அடிப்படையாக கொண்டே தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவில் கணினிக் கல்வியை வளர்ப்பதில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. கணினிக் கல்வி திட்டத்தின் வாயிலாக தமிழக அரசு கணினிக்கல்வியை வளர்க்க அனைத்து அரசு பள்ளிகளிலும் இலவசமாக கணினிகளை வழங்கியுள்ளது. கணிப்பொறி, மென்பொருள் தயாரிப்பு போன்றவற்றில் வளர்ச்சி நிலையை எட்ட தனியார் முதலீடுகளை தமிழக அரசு ஊக்கமளித்து வரவேற்கிறது. தமிழக அரசு சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி போன்ற இடங்களில் டைடல் பார்க் போன்ற வளாகங்கள் உருவாக்கி அங்கு தனியார் முதலீட்டை கவர வழி செய்துள்ளது.

**இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது.**

## இணையதளம் :

இன்று தகவல் தொழில்நுட்ப துறை பல்வேறு மாற்றங்களை சந்தித்து வருகிறது. இணையதளம் கணினித்துறையில் குறிப்பிடத்தக்கப் பணிகளை செய்து வருகிறது. இந்த இணைய தள முறையானது அமெரிக்க இணைய தள நிறுவனமான எம்.ஐ.டி (MIT) என்பதால் 1962 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டில் மேலும் இம்முறை வளர்ச்சி பெற்றது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவத்துறையால் கல்வியும், தகவல் தொழில்நுட்பமும் ஒருங்கிணைக்கப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டு கணினி இணையமுறை (Network) இணைய தளத்தில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவி செய்து வருகிறது.

இன்று வர்த்தகம் புரிவோரின் நன்மைக்காக எலெக்ட்ரானிக் வணிகம் (E-Commerce) இணைய தளத்தின் வழியில் நடைபெற்று வருகிறது. தமிழக அரசு தனது திட்டங்களை செம்மையாக செயல்படுத்த எலெக்ட்ரானிக் மாநாட்டுத் திட்டம்



Scanned with CamScanner

(E-conference) முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. நீதித்துறையில் எலெக்ராணிக் மாநாட்டுத் திட்டம் (E-conference) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இணைய தளம் இன்று மக்கள் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

Scanned with CamScanner